# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2009 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்*

---

*(2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஏப்பிறல் மாதம் 03 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

---

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 10.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

**2009 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 51/2008

**2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :- 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தை நீக்கவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலமும் :-

"ஆயின், எவரேனும் ஆளிடமிருந்து அல்லது பங்காண்மையிடமிருந்து அறவிடப்படற்பாலதான சேவை விதிப்பனவு எவ்விடயத்திலும் பின்வருவதனை விஞ்சுதலாகாது :-

(i) 2009, மாச்சு மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதன்முன்னர் முடிவடைகின்ற இயைபான ஏதேனும் காலாண்டுக்காகப் பதினைந்து மில்லியன் ரூபா ; அத்துடன்

(ii) 2009, ஏப்பிறல் மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற இயைபான ஏதேனும் காலாண்டுக்காக முப்பது மில்லியன் ரூபா ;" அத்துடன்

2-PL 003777 - 1,200 (2009/03)

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் -

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தை நீக்கிவிடுவதன்மூலமும் :-

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் உட் பந்தி (அ)வின் (ii) ஆம் விடயத்தில் "கழித்த பின்னரும் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கழித்தபின்னரும்;" என்னும் சொற் களை இடுவதன்மூலமும் :-

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் உட்பந்தி (அ)வின் (iii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் பதிய விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(iv) உரிமம்பெற்ற ஏதேனும் வர்த்தக வங்கிக்கு அல்லது வதிவற்ற எவரேனும் ஆளுக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டதான ஏதேனும் வெளி நாட்டு நாணயத்தில் குறிக்கப்படும் அரசினால் பிணைப்பொறுப்பளிக் கப்பட்ட முறியின் விற்பனை வரும்படி களைக் கழித்தபின்னரும் (2008, ஒற்றோபர் 21 ஆந் தேதியிலிருந்து பயனுறும்);

(v) ஏதேனும் திறைசேரிமுறி முதலீட்டு வெளிநாட்டு ரூபா கணக்கிலிருந்து பெறப்பட்ட நிதிகளிலிருந்து கொள் வனவு செய்யப்பட்ட -

(அ) (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டி யல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் திறை சேரி உண்டியலின் ; அல்லது

(ஆ) (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத் தொகுதிகளும் பிணையங்களும் கட்டளைச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் திறைசேரி முறியின்,

விற்பனை வரும்படிகளைக் கழித்த பின்னரும் (2008, யூன் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும்) ;

(vi) 2009, சனவரி மாதம் 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2009, திசெம்பர் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன்னர் பயனுறுத்தப்பட்ட ஏதேனும் பொருட்கள் அல்லது பண்டங்களின் ஏற்றுமதியிலிருந்தான பெறுகைகள் ;

(vii) உற்பத்தியாளரால் எவரேனும் ஏற்றுமதியாளருக்கு ஏற்றுமதிக்காக ஏற்றுமதியாளரினால் மேலும் செய்முறை அல்லது உற்பத்தியின்றி, 2009, சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதன்பின்னர் ஆனால் 2009, திசெம்பர் 31ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பயனுறுத்தப்பட்ட எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் வழங்கலிலிருந்தான பெறுகைகள் ;

(viii) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைச் சுற்றுலாப் பயண அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட, விடயத்திற்கேற்ப, ஒரு ஹோட்டலாக, தொழிற்படுத்துநராக அல்லது முகவராக உள்ள -

(அ) ஏதேனும் ஹோட்டலின் ;

(ஆ) ஏதேனும் உள்ளூர் சுற்றுலாப் பயணத் தொழிற்பாட்டின் ;

(இ) எவரேனும் உள்ளூர் சுற்றுலாப் பயண முகவரின்,

ஆனால், 2009, சனவரி 1 ஆந் திகதியன்று அல்லது அதற்குப்பின்னர் 2009, திசெம்பர் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பயனுறுத்தப்பட்ட எவையேனும் தொழிற் பாடுகளிலிருந்தான பெறுகைகள்; அத்துடன்";

(ஈ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தின் (அ) என்னும் பந்தியில் "அத்தகைய வங்கியின் மொத்த விற்பனை வரவின் பாகமாக அமைகின்றதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக,

"அத்தகைய வங்கியின் மொத்த விற்பனை வரவின் பாகமாக அமைகின்றதாகக் கருதப் படுதல் வேண்டும்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக –

"வங்கி" என்பது, ஒரு நிதிநிறுவனத்தை அல்லது அடகுபிடிப்பவரை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

"நிதிநிறுவனம்" என்பது, எந்த ஆளின் தொழில் அல்லது தொழிலின் பாகம், வைப்பு என்றவகையாகப் பணத்தை ; அல்லது கடன்தொகுதிப்பத்திரம் அல்லது முறி என்றவடிவத்திலான அல்லது வேறேதேனும் வடிவத்திலான கடனை ஏற்றுக் கொள்ளுதலையும், மற்றும் அதன்மீது வட்டி செலுத்துதலையும் கொண்டுள்ளதோ (அத்தகைய ஏற்றுக்கொள்ளுதல் அதன் சொந்தச் சார்பில் அல்லது வேறெவரேனுமாளின் சார்பில் செய்யப்படினுஞ்சரி), கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத அந்த எவரேனுமாள் என்று பொருளாகும் ; அத்துடன்".

***3***. இச்சட்டத்தின் *2* ஆம் பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவினாலும் *(2)* ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளினாலும் முதன்மைச் சட்டவாக்கத்தின் *2* ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், *2009*, ஏப்பிறல் *1* ஆந் தேதியிலிருந்து வலுவுக்குவருதல் வேண்டும். *பயனுறும் தேதி.*

***4***. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387 :* (வெளிநாடு) ரூபா *1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்